**FRIDAY SERMON**/ வெள்ளிக்கிழமை குத்து.ஃபா

(21 July 2017) 26 Shawwal 1438 Hijira)

# Commentary of Sura At-Tin (Chapter 95) Part- 2

## சூர: அத்தீன் (அத்தியாயம் 95) விளக்கம். பகுதி – 2



## HAZRAT KHALIFATHULLAH MUNIR AHMAD AZIM (A)

சலாமிற்கு பிறகு தஸ்ஹீதும் தஅவசும் அல்.ஃபாத்திஹாவும் ஓதிக்கொண்டு ஹஸ்ரத் கலீ.ஃபத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை) அவர்கள் கீழ்வருமாறு தம் உரையினை ஆரம்பித்தார்.

1. அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் பெயரால்
2. அத்தியின் மீதும் ஒலிவ மரத்தின் மீதும் சத்தியமாக!
3. ஸீனாய் மலையின் மீதும் சத்தியமாக!

4. **அபயமளிக்கும் இந்த நகரத்தின் மீதும் சத்தியமாக!**
5. **நாம் மனிதனை மிக அழகிய வடிவில் படைத்தோம்.**
6. **பின்னர் அவனை இழிந்தவனிலும் மிக்க இழிந்தவனாக்கினோம்.**
7. **நம்பிக்கை கொண்டு நற்செயல்கள் செய்தோரைத் தவிர அவர்களுக்கு முடிவு இல்லாத நற்கூலி உண்டு.**
8. **இதன் பின்னர் நியாயத்தீர்ப்பு நாளைப் பற்றி உம்மால் எப்படிப் பொய்யெனக் கருத முடியும்?**
9. **தீர்ப்பளிப்போரில் அல்லாஹ் மிக மேலான தீர்ப்பளிப்பவனில்லையா?**

**(95 : 1 – 9)**

அல்லாஹ்வின் அருட்களால் கடந்த வெள்ளிக்கிழமை ஆற்றிய ஜுமா குத்து.ஃபாவின் அதே விஷயத்தின் மீதிப் பகுதியினை இன்று தொடர்கின்றேன். அதாவது சூரா:அத்தீன் (அத்தியாயம் 95). கடந்த வாரம் இரண்டாம் வசனத்தில் அத்தி, ஒலிவு அகியவற்றையின் தத்துவத்தை விளக்கியிருந்தேன். இன்று இந்த சூரத்தின் மீதி பகுதியின் விளக்கத்தை அளிக்கின்றேன்.

### 3) **Wa Tuuri siiniina** (**“ஸினாய்” மலையின் மீது சத்தியமாக**)

ஹஸ்ரத் மூஸா(அலை) அவர்களுக்கு “தௌராத்” என்னும் வேத நூல் வழங்கப்பட்டது, ஸினாய் மலையில் வைத்தாகும். (தௌராத்-இறை சட்டங்கள்) சிறப்பு பெற்ற 10 கட்டளைகள் அது வாயிலாக கிடைத்தது. ஜுத மக்களுக்காக இறக்கப்பட்ட நூல். அந்த பிரத்தேகமான நிமிடத்தில், அதாவது மூஸா(அலை) அவர்கள் வெளிப்பாடு வாயிலாக இறைவனிடமிருந்து அந்த நூலை பெற்றுக் கொள்ளும் நேரத்தில் ஒரு ஒளி நிறைந்த வட்டாரத்தின் வடிவில் அசாதாரணமான நிலையில் ஹஸ்ரத் மூஸா(அலை)மின் முன்னால் அல்லாஹ் வெளிப்பட்டுக் கொண்டான். ஆனால் அந்த இறைகட்டளைகளில் ஜுத மக்கள் நேற்மையுடன் நிலை நிற்கவில்லை. அவர்கள் அன்னாருக்கு கட்டுப்படவில்லை. அவர்களின் செயல்களின் விளைவுகளுக்கு அவர்கள் ஆளாகிக் கொண்டனர். அவர்கள் இப்போதும் அதன் துன்பத்தை சுமக்கின்றனர். அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு அவர்கள் கீழ்ப்படிந்துக் கொள்ளாததன் விளைவேயாகும் இது.

இது உங்கள் அனைவருக்குமுள்ள ஒரு பாடமாகும். எப்போதெல்லாம் அல்லாஹ் அவனது கட்டளைகளை நமக்கு வழங்கிக் கொள்கின்றானோ- அதாவது குறிப்பாக திருமறையின் போதனைகளை சீரமைப்பதற்கும் இழந்த போதனைகளை திரும்பப் பெற்றுக் கொள்வதற்குமாக எப்போதெல்லாம் சீர்திருத்தாளரை அல்லாஹ் தோற்றுவிக்கின்றானோ அப்போதெல்லாம் அவர்கள் மூலம் திறக்கப்படும் பாதையினை நீங்கள் தவிற்த்துக் கொள்ளாமலிருங்கள் அது நம் ஆன்மாவின் மீட்சியின் வழியாகும். மாறாக அதை நீங்கள் மறுத்துக் கொண்டால், பதிலாக மோசமான வழியினை தேர்ந்தெடுத்தால், இறையத்தாட்சிகளுக்கும் இறை அடையாளங்களுக்கும் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கும் முன்னால் புறம் திரும்பி நின்றால் உங்களின் இறுதி மிக கவலைக்குரியதாகயிருக்கும். (அல்லாஹ்வின் முன்னால்)

அடுத்த வசனத்தில் அல்லாஹ் கூறுகின்றான்

**4. Wa haazal – Baladil-'amiin, (அபயமளிக்கும் இந்த நகரத்தின் மீதும் சத்தியமாக)**

அபயமளிக்கும் நகரம் என்பது, மக்காநகரம் என்பதில் சந்தேகமில்லை. சிலைகளை வணங்கிக் கொண்டிருந்த வேளைகளில் கூட மக்கா ஒரு பரிசுத்த பகுதியாக எண்ணப்பட்டிருந்தது. எவரும் தான் அங்கு போர்புரிய தயாராகவில்லை. ஹஸ்ரத் இப்ராஹீம் நபி(அலை)மின் காலகட்டம் முதல், ஒரு புனிதமான பகுதி என்று புகழ் பெற்றிருந்தும், நம் தூதர் ஹஸ்ரத் முஹம்மது(ஸல்)வை புறக்கணித்துக் கொள்ள அங்குள்ள மக்களுக்கு எந்த தடங்கலுமிருந்ததில்லை. சமூக புறக்கணிப்பின் கடினம் காரணத்தால் தான் பிறந்த நாட்டையே தவிர்த்துக் கொள்ளும் சூழ்நிலை உருவாகியது. மதீனா நகரத்தில் அடைக்கலம் தேடிசெல்லும் சூழ்நிலை வந்தடைந்தது. அந்த நகரத்தை அன்னார் மனமார நேசித்தார். **அவ்வாறு மக்காவுக்கு பிறகு முற்றிலும் புனிதமான நகரமாக மதீனா மாறியது.**

அதன்படி ஹஸ்ரத் முஹம்மது(ஸல்) அவர்களும் ஹஸ்ரத் அபூபக்கர்(ரலி) அவர்களும் மக்காவிலிருந்து மதீனாவின்பால் ஹிஜ்ரத் செய்தனர். அதை தொடர்ந்து மிக கொடிய துன்புறுத்தல்களுக்கும் புறக்கணிப்புகளுக்கும் ஆளாகி கொண்ட தூதரின் சீடர்களும் தோழர்களும் மக்காவிலிருந்து மதினாவில் குடியேறிக் கொண்டனர். **அல்லாஹ்வின் தூதர் என்று மக்களிடத்தில் வெளிப்படுத்திக் கொண்டதைத் தொடர்ந்து முஹம்மது(ஸல்)வை கொலை செய்து விடுவது வாயிலாக இஸ்லாமை முடிவுகட்டி விடலாம் என அவர்கள் (பகைவர்கள்) எண்ணிக்கொண்டனர். தன் சொந்த நாட்டில் ஒரு தீர்க்க தரிசியும் தீர்க்க தரிசியேயல்ல ("No one is Prophet in his own land") என்ற சொல்(adage) ஒருமுறைக் கூட விடியலாகி கொண்டது. ஆனால் காலம் முன்சென்றது முஸ்லீம்களுக்கு சாதகமாக அல்லாஹ் சூழ்நிலையை மாறிக் கொண்டான். அவனது பிரிய தூதர்(ஸல்)வுக்கு வெற்றியை அளித்தான். அது வழியாக அவன் தம் தூதருக்கு மக்காவில் நுழைந்துக் கொள்வதற்கான சூழ்நிலையை உருவாக்கினான். முற்றிலும் மரியாதையுடன் அன்னார் மக்காவில் நுழைந்துக் கொள்ளவும் புனிதயாத்திரை (ஹஜ்) செய்து கொள்ளவும் செய்தார். மக்காவின் சூழ்நிலையை அல்லாஹ் கீழ் மேலாக மறித்துக் கொண்டான். தூதர்(ஸல்) அவர்களை புறக்கணித்த இந்த பெரும்பான்மை மக்களும் இஸ்லாமை ஏற்றுக் கொண்டனர். அவர்கள் முஸ்லீம்களாக மாறிக் கொண்டனர். இஸ்லாம் மதத்தை ஏற்றுக் கொள்ளாத மக்களுக்கிடையில் தூதர் வாழ்ந்துக் கொள்வதில் எந்த விதமான கெடுதலும் எங்களுக்கில்லை என அவர்கள் தெரியப்படுத்திக் கொண்டனர். வெற்றி வந்தடைந்ததோடு ஒருமுறை கூட மக்கா ஒரு புனித நகரமாக ஆதரிக்கப்பட்டது. குறிப்பாக "கஆப". மேலும் அதன் வல்லமையினை அது திரும்பப் பெற்றுக் கொண்டது. "கஆப"விற்குள்ளிலும் வெளியிலுமாகயிருந்த சிலைகளையாவும் நீக்கிக் கொண்டனர். மேலும் அல்லாஹ்வின் ஏகத்துவத்தின் வல்லமை அந்த நகரத்தில் அலையடித்துக்**

கொண்டது. மக்காவரலாற்றின் வனப்பு அதுவேயாகும். இஸ்லாமின் வருகையோடு மக்காவின் மகத்துவமும் மரியாதையும் திரும்பப் பெறமுடிந்தது. சீர்கின் எவ்வித அடையாளமுமேற்காமல் அல்லாஹ் இன்றும் அதை பாதுகாத்து வைத்திருக்கின்றான். அல்லாஹ்விடம் களங்கமற்ற பந்தம் வைத்திருப்போர்களுக்கு புனித ஹஜ் செய்வதற்குரிய நகரமாக அது இன்றும் திகழ்கின்றது. அல்லாஹ்விடமிருந்துள்ள அன்பும் மன்னிப்பும் அருட்களும் கிடைக்கும் பகுதியாக அது நிலைநிற்கின்றது. காரணம் அவர்கள் இந்த உண்மைவழியில் சுயம் தியாகங்கள் செய்கின்றனர். அவர்கள் புனித யாத்திரை (ஹஜ்) செய்கின்றனர். நிச்சயமாகவும் மக்களின் நம்பிக்கை எவ்வளவு என்பதை அளந்துக் கொள்வதற்கும் விதித்து கொள்வதற்கும் தகுதியுடையவன் அல்லாஹ் மட்டுமாகயிருக்கின்றான்.

அடுத்த வசனத்தில் அல்லாஹ் கூறுகின்றான்

**5. Laqad khalaqnal-‘insaana fiii ‘ahsani taqwiim,** திடமாக நாம் மனிதனை மிகவும் அழகிய அமைப்பில் படைத்தோம்.

“தக்வீம்” என்ற வார்த்தையின் பொருள், அமைத்துக் கொள்தல், முன்மாதிரியாக படைத்துக் கொள்ளுதல், இயற்கைக்குட்பட்ட தரத்தில் உருவாக்கிக் கொள்ளுதல், அங்க லட்சணத்தோடு வடிவமைத்துக் கொள்ளுதல், சிறந்த தன்மையுடன் உருவாக்கிக் கொள்ளுதல், என்றெல்லாம் அர்த்தம். அல்லாஹ்வின் படைப்பில் எந்த குறையும் தரிசிக்க ஆகாது. அவனது மற்ற படைப்பினங்களுமாக ஒப்பிடும்போது மனிதனை படைத்திருப்பது முற்றிலும் சிறந்த நிலையிலாகும். முற்றிலும் புனிதமான நிலையிலாகும். முழுமையான நிலையிலாகும். இறைவன் வழங்கிய அத்தன்மையை பாதுகாத்துக் கொள்ளவேண்டியதும் அந்த நல்லியல்பையும் பருமாற்றத்தையும் மேலும் விரிவாக்கிக் கொள்ள வேண்டியதும் அதுவாயிலாக அந்த இயல்பை முழுமைப்படுத்திக் கொள்ள வேண்டியதும் மனிதனின் கடமையாகும். திருமறையில் அல்லாஹ் கூறியதுபோன்று.

“ஆகவே நீர் உம் முகத்தை தூய மார்க்கத்தின் பக்கமே முற்றிலும் திருப்பி நிலைநிறுத்துவீராக! எதில் அல்லாஹ் மனிதர்களைப் படைத்தானோ அதுவே அவனுடைய இயற்கை மார்க்கமாகும். அல்லாஹ்வின் படைத்தலில் மாற்றம் இல்லை. அதுவே நிலையான மார்க்கமாகும். ஆனால் மனிதர்களில் பெரும்பாலோர் இதை அறியமாட்டார்கள்” (30 : 31)

அல்லாஹ் மனிதனைப் படைத்திருப்பது அவ்வாறேயாகும். சிந்திப்பதற்கான ஆற்றல் அவருக்கு கிடைத்திருக்கின்றது அவருக்கு தம்மை சுயம் கட்டுப்படுத்திக் கொள்வதற்கான ஆற்றல் கிடைத்திருக்கின்றது. அல்லாஹ்வின் உத்தரவுக்கு ஏற்றவாறு அல்லாஹ் அவருக்கு இத்தகையிலான அருட்களை வழங்கியிருப்பதால், வானவர்களுக்கும் அப்பாறான பதவியினை அவன் அவருக்கு வழங்கியிருப்பதால், மனிதனுக்கு கீழ்ப்படிந்துக் கொள்ளுமாறு அவன் வானவர்களுக்கு (மலக்குகளுக்கு) கட்டளை விடுத்திருப்பதால் அதாவது

ஆதம்(அலை)க்கு கீழ்படிந்துக் கொள்ளவும் கட்டுப்பட்டுக் கொள்ளவும் கட்டளையிட்டிருப்பதால், தம் வாழ்க்கையை ஆட்சி செய்வதற்கான ஆற்றல் அவருக்கே சுயம் வழங்கியிருப்பதால், அவரது தன்னம்பிக்கையையும் புத்திசக்தியையும் அவர் பயன்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியமாகும். இந்த சிறப்பான அருட்களை மிக நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அறிவுத்திறனும் அல்லாஹ்வின் அண்மையும் மனிதனின் மீது பொழியப்பட்டிருக்கின்றது. இந்த அருட்களிலிருந்து அவர் அதிகபட்சமாக பயனைப் பெற்றுக் கொள்ள வேண்டியதாகும். அவ்வாறேயானால் அல்லாஹ் அவரின் செயல்களில் திருப்தியுடையவனாக மாறிவிடுவான். அவரது அச்செயல்கள் காரணம் அல்லாஹ்வின் பார்வையில் அவரது பதவி உயர்ந்துக் கொள்கின்றது. ஆனால் அவருக்கு வழங்கப்பட்டிருக்கும் இந்த அருட்களை தவறான முறையில் பயன்படுத்திக் கொண்டால் அதாவது அல்லாஹ் அவருக்கு வழங்கியிருக்கும் ஆற்றல்களை தவறாக பயன்படுத்திக் கொண்டால் அவர் மிகப்பெரிய அபாயத்தின் பால் சென்றுவிடுவார். மேலும் அவரது நிலை ஒரு விலங்கை விட தாழ்ந்தநிலையில் சென்றடைந்து விடும். அதன் பலனாக அவர் அல்லாஹ்வை இழந்து விடுகின்றார். அவர் பெற்றுக் கொள்ளயிருக்கும் அனைத்து அருட்களையும் இழந்து விடுகின்றார். அல்லாஹ்விடம் நேர்மையாகயிருப்பதால் மட்டும் பெற்றுக் கொள்ள முடிவதாகும் அந்த அருட்கள்யாவும்.

அல்லாஹ் திருக்குர்-ஆன் வாயிலாக கூறுகின்றான்

**“எவர்கள் நம்பிக்கை கொண்டு நற்செயல்கள் செய்கின்றார்களோ அவர்களைத் தவிர அவர்களுக்கு என்றும் முடிவில்லாத நற்கூலியுண்டு” (95 : 7)**

**“ஆதமுடைய மக்களே! மெய்யாகவே நாம் உங்களுக்கு உங்களுடைய மானத்தை மறைக்கவும் உங்களுக்கு அலங்காரமாகவும் ஆடையை அளித்துள்ளோம். ஆயினும் தக்வா(பயபக்தி) எனும் ஆடையே மேலானது. இது அல்லாஹ்வின் அடையாளங்களில் பட்டதாகும். இதைக்கொண்டு நல்லுணர்வு பெறுவார்களாக” (7 : 27)**

அடுத்த வசனத்தில் அல்லாஹ் கூறுகின்றான்

**6. Summa radadnaahu ‘asfala saafiliin (பின்னர் அவனைத் தாழ்ந்தவர்களில் மிக்க தாழ்ந்தவனாக்கினோம்)**

இந்த வசனம் மூலமாக அல்லாஹ் நம்மை தெரியப்படுத்தியிருப்பது மிக தெள்ள தெளிவாகயிருக்கின்றது. அதாவது மனிதன் அல்லாஹ்வுக்கு மாறாக செயல்பட்டால், இறை கட்டளைகளை புறக்கணித்துக் கொண்டால், தவறான செயல்களில் ஈடுபட்டுக்கொண்டிருந்தால், அல்லாஹ்வையன்றி அடிப்படையற்ற தற்காலிக விஷயங்களில் மூழ்கியவாறிருந்தால், அவரது சுய மூடத்தனம் காரணமாக நல்லொழுக்க ஆன்மீக விஷயங்களில் சீரழிந்துக் கொள்வதோடு

முற்றிலும் வெறுக்கப்பட்ட ஒரு விலங்கினைப் போன்று அவர் பரிணமித்து விடுவார். அல்லாஹ்வின் பார்வையில் அவர் மிக்க வெறுக்கப்பட்டவராகயிருப்பார். நேரம் வந்தடையும் போது அல்லாஹ் அவன் மீதான தீர்ப்பை கூறிக்கொள்வான். அதாவது இறுதிநாளில் அல்லாஹ்வையன்றி வேறு எந்த நீதிபதியும் இருப்பதில்லை. முற்றிலும் சிறந்த நேர்மையாளரான நீதிபதி நம்மைப் படைத்த அல்லாஹ் மட்டுமாகவேயிருப்பன். அத்தகையிலான ஒரு நாள் நமக்காக உதயம் செய்து விடும். அதில் எந்த அய்யமுமில்லை. நாம் ஆண்களாகட்டும் பெண்களாகட்டும் ஒவ்வொருவரும் அல்லாஹ்வின் முன்னால் பதில் கூறிக் கொள்ள வேண்டும்.

அதை தொடர்ந்து அல்லாஹ் கூறுகின்றான்

**7. ‘Illal-laziina ‘aamanu wa ‘amilus-saalihaati falahum ‘ajrun ghayru mamnuun** **(எவர்கள் நம்பிக்கை கொண்டு நற்செயல்கள் செய்கின்றார்களோ அவர்களைத் தவிர அவர்களுக்கு என்றும் முடிவில்லாத நற்கூலியுண்டு)**

இந்த வசனப்படி அல்லாஹ் நம்மிடம் மிக தெள்ள தெளிவாக கூறியிருக்கின்றான். அதாவது ஒருவர் தம் நிலையினை (பருமாற்றத்தை) நன்குப்படுத்திக் கொண்டால், இறைச் செய்தியை ஏற்றுக் கொள்ளவும் பின் தொடர்ந்துக் கொள்ளவும் செய்தால், அதாவது **இழந்துப்போன இறை போதனைகளை சீரமைக்க அவன் தூதர்களை அனுப்பி வைக்கும் நேரங்களிலெல்லாம் அவரை எவர் ஏற்றுக் கொள்கின்றார்களோ அத்தகையோர்களுக்கு அல்லாஹ் அசாதரணமும் அழகானதுமான ஒரு விதியினை அமல்படுத்துகின்றான். அவர் நல்லொழுக்கபரமாகவும் ஆன்மீக பரமாகவும் மேன்மையடைந்து விடுகின்றார். அதன் காரணம் அவர் அல்லாஹ்வையும் அவனது தூதர்களையும் ஏற்றுக்கொண்டார் என்பதனாலாகும். இத்தகையாளர்களுக்கு அவர்களின் நற்கூலி நல்லதும் முடிவில்லாததுமாகயிருக்கும். அவர்கள் இந்த நற்கூலிகளை இவ்வுலகில் வைத்தே பெற்றுக் கொள்ளவும் துவங்குகின்றனர்.**

அடுத்த வசனத்தில் அல்லாஹ் கூறுகின்றான்.

**8. Famaa yukazzibuka ba’-du bid-Diin? “எனவே (இதற்குப்) பின்னர் நியாயத் தீர்ப்பு நாளைப்பற்றி உம்மிடம் எது பொய்யாக்க முடியும்?**

இங்கு உம்மை என்பது புனித தூதர் முஹம்மது(ஸல்) அவர்களையோ அல்லது மானிட குலத்தை முழுவதாகவோ குறிப்பிடுகின்றது. இதற்கு பின்னர் அர்த்தமாக்கிக் கொள்வது உங்களுக்கு மிக நல்ல முறையில் செய்தியை எட்ட வைத்தப்பின், உங்களை உணரச் செய்ததர்குபின், அந்த நற் செயல்களுக்கு ஏற்றவாறு அவர் சமுதாயத்தாரிடம் மிக நல்ல முறையில் பருமாறிக் கொள்ள வேண்டியதாகும். மட்டுமின்றி மானிட குலத்தையாவும் படைத்ததும் அவர்களுக்குயாவும் நல்வழி காட்டிக் கொள்வதும் அல்லாஹ் ஒருவனேயாவான் என அவர் நன்கு உணர்ந்துக் கொள்ள வேண்டியதாகும். பின்னர் அவர் அந்த

இறை கட்டளைகளுக்கு எதிராக செயல்பட்டால், இறையடையாளங்களை மறுத்து விட்டால், அவனது கட்டளைகளை புறக்கணித்து விட்டால், இறை அத்தாட்சிகளை நிராகரித்துக் கொண்டால், இறைத்தூதர்களை மறுத்துவிட்டால் அவர்களை நிச்சயமாகவும் இறைவன் தண்டனைகளுக்கு ஆளாக்கி விடுவான். அவர்களை அவன் நிச்சயமாகவும் கைவிட்டு விடுவான். இவ்வுலகிலும் மறுவுலகிலும்! நம்பிக்கை கொண்டோர்களிடத்தில் அல்லாஹ் கூறிக்கொள்ளும் ஒரு குர்-ஆன் வசனமுண்டு. அதில் அல்லாஹ் கூறுகின்றான்.

**“ஈமான் கொண்டவர்களே! அல்லாஹ் எவர்கள் மீது கோபம் கொண்டிருக்கின்றானோ அந்தச் சமூகத்தாருடன் நேசம் கொள்ளாதீர்கள். ஏனெனில் மண்ணறை வாசிகளை பற்றி(அவர்கள் எழுப்பப்பட மாட்டார்கள் என்று) நிராகரிப்போர் நம்பிக்கை இழந்தது போல் மறுமையைப்பற்றி நிச்சயமாகவும் நம்பிக்கையை இழந்து விட்டனர்” (60 : 14)**

இந்த வசனம் வாயிலாக அல்லாஹ் மானிட குலத்தை அனைத்தையும் தெரியப்படுத்துகின்றான். அதாவது ஒரு தினம் வந்து சேரும், விதிநாள். அன்று அனைத்து மக்களும் அவரவரது கணக்கு இறைவன் முன்னால் கூற வேண்டியதாகயிருக்கும் அவர்கள் நம்பிக்கையாளராகயிருந்தாலும் சரி அவ நம்பிக்கையாளராகயிருந்தாலும் சரி! இந்த வசனம் வாயிலாக அல்லாஹ் நம்பிக்கையாளர்களை உணரச் செய்கின்றான். அல்லாஹ்வின் அத்தாட்சிகளுக்கு முன்னால் புறம் திரும்பிக் கொண்டோர்களை நீங்கள் நேசித்துக் கொள்ளாமலிருங்கள் ஏனெனில் அவர்கள் அல்லாஹ்வின் கோபத்திற்கு ஆளாகிக் கொண்டோர்களாகயிருக்கின்றனர். அல்லாஹ்வுக்கு எதிராக அவர்கள் செயல்பட்டுக் கொண்டது எதற்கு? அவர்கள் சிந்தித்து கொள்ளவில்லையா, இத்தகையான ஒரு நாளினை எதிர்கொள்ள வேண்டியதாகயிருக்கும் என? அன்று அல்லாஹ்வின் முன்னால் பதில் கூறிக்கொள்ள வேண்டியதாகயிருக்கும் என ஏன் அவர்கள் சிந்திக்கவில்லை? இதுவே அல்லாஹ் இங்கு விளக்கியிருப்பது. இத்தகையாளர்கள் அல்லாஹ்வின் தூதர்களுக்கும் அவர்களின் அறிவுரைகளுக்கும் இறையடையாளங்களுக்கு மாறாக செயல்பட்டு அதை நிராகாரித்து கொண்டவர்களாவார்கள். அவர்களுக்கு மறுமையை பற்றி எந்தவித எதிர்பாரலுமில்லை. அவர்கள் அவநம்பிக்கையாளர்களை போன்றவர்கள் அவர்களுக்கும் அவநம்பிக்கையாளர்களும் ஒன்றுக்கொன்று எந்தவித வேற்றுமையுமில்லை.

இறுதியாக அல்லாஹ் கூறுகின்றான்

## 9. Alay–sallaahu bi-‘Ahkamil-haakimiin? (“அல்லாஹ் தீர்ப்புச் செய்வோரில் எல்லாம் மிக மேலாகத் தீர்ப்புச் செய்பவனில்லையா?”)

ஒரு அணு அளவிற்கு எவராவது நன்மை செய்தால் அதற்கான நற்கூலி அவன் வழங்கிக் கொள்வான். அதைப்போன்று அணுஅளவு எவராவது தவறு செய்தால் அதற்கான தண்டனையும் அவன் அளித்துக் கொள்வான். நம்பிக்கையாளர்கள் அனுதினம் 5 வேளை தொழுதுக் கொள்ள வேண்டும்

என்பது இஸ்லாமுக்கு அல்லாஹ் அளித்த மாபெரும் அருளாகும். அத்தோடு அவர்கள் திருக்குர்-ஆனை ஓதிக்கொள்கின்றனர். மட்டுமின்றி திக்கிர் மூலமாக அவர்கள் இறையெண்ணத்தை நிலைநாட்டிக் கொள்கின்றனர். மனிதன் முற்றிலும் பலவீனமானவன் என்று மிக நன்றாக இறைவனுக்கு தெரியும். அதனால் நேர்வழியை அடைந்தவர்களும் நேற்மையாளர்களும் இவ்விஷயத்தில் அஞ்சவோ கவலைப்படவோ வேண்டாம். இறை அத்தாட்சிகளுக்கும் அடையாளங்களுக்கும் தூதர்களுக்கும் எதிராக செயல்பட்டவர்கள் மட்டுமே அஞ்ச வேண்டியது. அவர்களுக்கு நிச்சயமாகவும் அல்லாஹ்விடமிருந்து பதிலுக்கு பதிலான தண்டனையுண்டு. அவர்களின் தண்டனை முடிவில்லாததாகும். அத்தகை தண்டனைகளிலிருந்து அவர்களுக்கு இரட்சிப்புமில்லை.

திருக்குர்-ஆனில் ஒரு வசனமிருக்கின்றது. அதில் அல்லாஹ் கூறுகின்றான்

**“நிச்சயமாக நிராகரிப்பவர்கள் (பிறரை) அல்லாஹ்வின் பாதையை விட்டு தடுத்தும் நேர்வழி தங்களுக்கு தெளிவான பிறகு(நம்) தூதரை எதிர்த்து முரண்பட்டுக் கொண்டும் இருக்கின்றனரோ அவர்கள் அல்லாஹ்வுக்கு எவ்வித இடற்பாடும் செய்துவிட முடியாது. அன்றியும் அவர்களுடைய செய்கைகளை அவன் பயனற்றவையாக ஆக்கியும் விடுவான்” (47 : 33)**

ஒரு தூதரின் வருகையோடு, அதாவது இறைஅடையாளங்களின் வருகையோடு மக்களின் உண்மையான முகம் உங்களுக்கு பகுத்தறிந்திட முடியும். அத்தோடு அவர்களின் இதயத்திலிருக்கும் நோய்களை பற்றியும் உணரயியலும். நிச்சயமாக இந்த இறை அடையாளங்களுடன் அந்த நோய்களும் பிரகடனமாகிவிடும். குர்-ஆனில் ஒரு வசனத்தில் அல்லாஹ் கூறியிருக்கின்றான்.

**“எவர்களுடைய இதயங்களில் நோயிருக்கின்றதோ அவர்கள் தங்களுடைய கபடங்களை அல்லாஹ் வெளியாக்க மாட்டான் என்று எண்ணுகின்றார்களா?”**

**(47 : 30)**

அல்லாஹ் கூறுகின்றான் அவர்களை ஒரு போதும் அல்லாஹ் மன்னிப்பதில்லை. ஈமான் இல்லாமல் அவர்கள் மரணமடைந்து விடுவார்கள். ஏனெனில் அவர்களின் செய்கைகளும், அவர்கள் பின்பற்றிக் கொண்டவையும் அல்லாஹ்வின் கோபத்திற்கு காரணமானவையாயிருந்தது. அல்லாஹ்வுக்கு திருப்தியானதனைத்தையும் அவர்கள் வெறுத்துக் கொள்கின்றனர். அவ்வாறு அவர்களின் செயல்களை அனைத்தும் பலனற்றதாக அல்லாஹ் மாற்றிக் கொள்கின்றான். ஆனால் “அல்லாஹ் தீர்ப்புச் செய்வோரில் எல்லாம் மிக மேலாகத் தீர்ப்புச் செய்பவனில்லையா? என்ற வசனம் கேட்கும் பொழுது நம்பிக்கையாளர்கள் “ஆம்” என பதிலளிப்பார்கள். “நாங்கள் அதற்கு சாக்சிகளாகயிருக்கின்றோம்” என்பார்கள். நிச்சயமாகவும் நான் சாக்சிகளில் ஒருவனாகயிருக்கின்றேன். “யா அல்லாஹ்! உண்மையாக நீ முற்றிலும் சிறந்த நீதிபதியாகயிருக்கின்றாய். நீ எங்களுக்கு அருளாக அளித்த மதம் உண்மை

மதமாகயிருக்கின்றது. மற்றனைத்து மதங்களின் மீது இது வெற்றியடைகின்றது. இன்ஷா அல்லாஹ்

ஆகவே **என் தோழர்களே என் அனைத்து முஸ்லீம் சகோதர – சகோதரிகளை! அல்லாஹ்வின் வல்லமைக்கு நாம் சாக்சிகளாகயிருக்கின்றோம். அதாவது இஸ்லாம் நிச்சயமாகவும் உண்மை மதமாகின்றது. அதை அல்லாஹ் நம்மீது இறக்கி கொண்டவையாகும். அதை மண்ணில் போட்டு குறைபடுத்துவது சரியா? அதை நாம் கைவிட்டுக் கொள்வது சரியா? ஆகவே அல்லாஹ்வை திருப்திப்படுத்துவதற்கு நம்மால் முடிவதனைத்தையும் செய்ய வேண்டுமல்லவா? நம் எளிமையான முயற்ச்சிகளால் அல்லாஹ்வின் ஏகத்துவத்தை மேலும் நிறுவிக் கொள்ள வேண்டுமல்லவா? நாம் செய்யும் இந்த சிறு முயற்ச்சிகளைக் கூட அல்லாஹ் மிக பெரிதாக எண்ணிக் கொள்வான். இன்ஷா அல்லாஹ்! எல்லா முஸ்லீம்களும் இந்த உண்மையை உணர்ந்திடட்டும்! நமக்கு நம்மை தூய்மைப்படுத்துவோம் நம் நற்செயல்களைக் கொண்டும் நற்நோக்கங்களைக் கொண்டும் மானிடகுலத்திற்கு முற்றிலும் சிறந்த மன் மாதிரியாக நமக்கு திகழ்வோம் இன்ஷா அல்லாஹ்! ஆமீன்.**



## ISSUED BY:


Jamaat Ul sahih Al Islam
Dawa Department
Tamil Nadu, India

**Cell:** 9789180817
**Cell:** 7339689239
**Web:** www.jamaat-ul-sahih-al-islam.com


## TRANSLATED BY:


*Azim Ahmad*

**E-mail:** azimahmad070@gmail.com
**Cell:** 9789180817